4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு.**M.**நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண்.**284/2023** நாள்: **14.10.2025** வா.சா.**1** – சண்முகவேல்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

04.12.1985 தேதியிட்ட கிரைய ஆவணப்படி எனக்கு 6.79 ஏக்கர் சொந்தம் என்றால் சரிதான். மேற்படி சொத்தில் 2 ஏக்கர் பூமியை நான் நான்கு பேருக்கு விற்றேன். அதை வாங்கியவர்கள் மனைகளாக வீடு கட்டுவதற்கு பிரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 6.79 ஏக்கர் என்னுடைய பாட்டனுடைய சொத்தை விற்பனை செய்து வாங்கிய சொத்தாகும். மேற்படி சொத்தில் எனது இரண்டு பிள்ளைகளுக்கு பங்குள்ளது. மேற்படி எனது இரண்டு மகள்கள் பெயர் லோகநாயகி, தமிழரசி ஆகும். எனது மகள்கள் இருவருக்கும் திருமணமாகிவிட்டது. லோகநாயகி மற்றும் அவரது கணவரும் JCB இயந்திரம் வைத்து தொழில் செய்து வருகிறார்கள். மேற்படி லோகநாயகிக்கு ஒரு மகன் உள்ளார். மேற்படி தமிழரசி சுந்தராபுரத்தில் ஒரு கம்பெனி வைத்து நடத்திவருகிறார். மேற்படி தமிழரசி LPG கம்பெனியிலிருந்து உதிரிப்பாகம் செய்து கொடுக்கிறார். மேற்படி 2 ஏக்கரை நான் விற்பனை செய்யும் போது எனது மகள்கள் இருவரும் கையொப்பம் எதுவும் போடவில்லை. நான் எதற்காக அவர்களிடம் கையொப்பம் வாங்கவில்லை என்றால் என் பெயரில் கிரைய பத்திரம் இருந்ததால் நான் கையொப்பம் வாங்கவில்லை. எனக்கு மேற்படி 2 ஏக்கர் சொத்து சர்வ சுதந்திரமாய் கிரையப்படி பாத்தியப்பட்டது என்று சொல்லி தான் 4 நபர்களிடம் விற்பனை செய்தேன் என்றால் சரிதான். GD Finance க்காக அதன் உரிமையாளர் நடராஜனுக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.2 ஆன கிரைய பத்திரத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன். மேற்படி கிரைய ஆவணத்தில் எனது மகள் தமிழரசி அவர் கணவர் பாலகுமாரும் சாட்சி

கையொப்பம் போட்டார்கள் என்றால் சரிதான். என்னை இன்னார் என்று சார் பதிவாளர் அலுவலகத்தில் அடையாளம் காட்டியது மேற்படி தமிழரசி, பாலக்குமார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆன கிரைய ஆவணத்தில் 04.12.1985 தேதியிட்ட கிரைய ஆவணப்படி தனக்கு சுயார்ஜுதமாய் பாத்தியப்பட்ட பூமிகளில் ஒரு பகுதியை ரூ.30 லட்சத்திற்கு கிரையம் செய்து கொடுப்பதாக 70 சென்ட் மேற்படி GD Finance நடராஜனுக்கு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் எனது மருமகன் பாலக்குமார் வியாபார அபிவிருத்திக்காக பல தவணைகளில் ரொக்கமாக பெற்றுக்கொண்டது ரூ.20 லட்சம் என்றும், இன்று ரூ.10 லட்சம் காசோலையாக பெற்றுக்கொண்ட வகையில் ரூ.30 லட்சம் செல்லாகிவிட்டது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் மேற்படி கிரைய ஆவணத்தில் கிரைய தேதியிலே சுவாதீனத்தை ஒப்படைத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கிரையம் கொடுத்த சொத்தில் எனக்கோ, எனது வாரிசுகளுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் அதில் வில்லங்க விவகாரங்கள் இருந்தால் அதை தீர்த்து கொடுப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் 70 சென்ட் பூமியை பட்டா மாறுதல் செய்வதற்கும், மனுவில் கையொப்பம் போட்டு கொடுத்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது மேற்படி 70 சென்ட் பூமிக்கான பட்டா, சிட்டா GD Finance நடராஜன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தில் GD Finance நடராஜன் கம்பிவேலி போட்டு, செட் அமைத்து மின் இணைப்பும் பெற்றுள்ளார் என்றால் சாட்சி கம்பிவேலி, செட்டை நான் தான் போட்டேன் என்று கூறுகிறார். வழக்குரையிலும், சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் முள்வேலி இருப்பதாகவும், செட் இருப்பதாகவும், அதை நான் போட்டதாகவும், சொல்லவில்லை என்றால் சரிதான். பதிவு அலுவலகத்திற்கு மேற்படி கிரைய ஆவணத்தை பதிவு செய்யும்போது கிரைய ஆவணம் சம்பந்தமாகவும், மறுபயன் பெற்றுக்கொண்டீர்களா என்று

அலுவலகத்தில் கேட்டார்கள் நான் ஆமாம் என்று சொன்னேன். மேற்படி கிரையத்தில் காசோலை மூலம் கிடைத்த பணத்தை விவசாயத்திற்கு போர் போடுவதற்கு பயன்படுத்தினேன். நான் கூடுதல் ஆவணங்களாக எனது மகள் தமிழரசி வங்கி கணக்கு புத்தகம், பாலக்குமார் வங்கி கணக்கு புத்தகம், Shri Sivesh Engineering வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றின் நகல்களை தாக்கல் செய்துள்ளேன். எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரத்தை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மருமகன் பாலக்குமாருக்கு GD Finance நடராஜன் மூலமாக 27.04.2019 அன்று காசோலை மூலமாக ரூ.5 லட்சம் கடன் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வங்கி ஆவணங்களிலிருந்து ரூ.5.70 லட்சம் GD Finance நடராஜனுக்கு பாலக்குமார், தமிழரசி, அவர்கள் நிறுவனம் Shri Sivesh Engineering செலுத்தியதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 வங்கி கணக்கு புத்தகத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் வாங்கிய கடனை 2019 அன்று திருப்பி செலுத்திவிட்டதாக சொல்லியுள்ளேன், எந்த தேதியில் நான் திருப்பி செலுத்தினேன் என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் பிரதிவாதி அசல் தொகை எவ்வளவு செலுத்தினேன், எவ்வளவு வட்டி செலுத்தினேன் என்ற விவரத்தையும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் பிரதிவாதியிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன், அதற்கு எவ்வளவு வட்டி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய விவசாய தேவைக்காகவும், மகள் மற்றும் மருமகன் தொழிலுக்காவும் தாவா சொத்தை விற்பனை செய்தேன் என்றால் சரிதான். மீதமுள்ள எனது 4 ஏக்கர் சொத்தை பொறுத்து GD Finance நிறுவனத்திற்கு ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்திற்கு ரூ.30 லட்சத்தை காசோலையாக முன் பணத்தை

பெற்றுகொண்டேன் என்றும், ரூ.10 லட்சத்தை மீத தொகையாகவும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் மேற்படி கிரைய ஒப்பந்தம் மூலம் பெற்ற முன்தொகை ரூ.30 லட்சத்தை எனது மகள் லோகநாயகிக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தற்போது மேற்படி லோகநாயகியை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரத்தில் எனது மகள்கள் இருவரும் என்னுடன் சேர்ந்து கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். பூர்வீக சொத்தை விற்று தான் 6.79 ஏக்கர் நிலத்தை வாங்கினோம் என்றும், அதில் எனது இரு மகள்களுக்கு பங்குள்ளது என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து சுயார்ஜித சொத்து என்றால் சரியல்ல. கிரைய பத்திரத்தையும், கிரைய ஒப்பந்தத்தையும் முறியடிக்க வேண்டும் என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.14 16:02:10 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.